Received 19/6/08

சுருக்கம்

பத்தகக் கடைகள் – உள்ளாட்சி அமைப்புகள்– அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளால் நடத்தப்படும் பேருந்து நிலையங்களில் தமிழ் புத்தக கடைகள் வைக்க தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்திற்கு கடை ஒதுக்கீடு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசு ஆணை (2ப) எண். 64 நாள் : 5.5.2008

படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (2 ப) எண். 120, ந.நி.(ம)கு.வ.(நநி4)துறை
நாள் : 10.7.07
2) தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத் தலைவர் கடிதம் நாள் 4.4.08

-----

ஆணை:

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

1. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பேருந்து நிலையங்களில் தமிழ் நூல் விற்பனைக்கு இரு பெட்டிக்கடைகள் ஒதுக்கீடு செய்யலாம்.

2. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பெட்டி கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.200/- அல்லது அப்பகுதியில் நிலவும் உயர்ந்த குத்தகை தொகையில் நான்கில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவோ அதனை பொது ஏலம் தவிர்த்து நிர்ணயம் செய்யலாம்.

3. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை எனினும் அங்கீகரிக்கப்பட்ட புத்தக விற்பனையாளர்கள்/விநியோகஸ்தர்கள் ஆகியோர்களுக்கு தனிநபர்களை விட முன்னுரிமை தரலாம்.

4. இவ்வாறு பொது ஏலம் தவிர்த்து தமிழ் நூல்கள் விற்பனைக்கு என நடப்படும் பெட்டிக் கடைகளில் தமிழ் நூல்கள் தவிர வேறு ஏதும் விற்பனை செய்யக் கூடாது என்று குத்தகையில் நிபந்தனை விதிக்கப்பட வேண்டும்.

5. நிபந்தனைகள் மீறப்படும் நிகழ்வில் குத்தகை ரத்து செய்யப்படலாம்.

6. பெட்டிக்கடையை உரிமம் பெற்றவரே தன்னுடைய செலவில் கடையை நிர்மாணித்துக் கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கலாம்.

2) பார்வை 2-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத் தலைவர், தங்களது சங்கம் கடந்த 31 வருடங்களாக சென்னை மற்றும் மதுரை போன்ற நகரங்களில் புத்தக கண்காட்சி நடத்தி வருவதாகவும், இதன் மூலம் ஏழு இலட்சம் முதல் ஒன்பது இலட்சம் வரை புத்தகம் படிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளதாகவும், இவ்வாறு தங்களது புத்தக கண்காட்சியை பிற நகரங்களுக்கும் விரிவுபடுத்தி வருவதாகவும், எனவே, தங்களுக்கென, நகராட்சிகள், மாநகராட்சிகள், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பேருந்துநிலையம் மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்து நிலைய கடைகளில் ஒரு கடையினை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3) தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்தின் கோரிக்கையை அரசு நன்கு பரிசீலனை செய்தது. புத்தக விற்பனையில் மேற்படி சங்கம் ஆற்றி வரும் பணியை கருத்தில் கொண்டு, அச்சங்கப் பணியினை ஊக்குவிக்கும் விதமாக, தமிழ் புத்தகங்களை விற்பனை செய்ய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளால் நடத்தப்படும் பேருந்து நிலையங்களிலுள்ள கடைகளில் தமிழ் நூல் விற்பனைக்கென ஒதுக்கப்பட்டுள்ள இரு கடைகளில், ஒரு கடையை தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்திற்கு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒதுக்கீடு செய்யலாம் எனக் கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

i) தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கம் தங்களுக்கு ஒதுக்கப்படும் பெட்டிக் கடைகளில் தமிழ்நூல்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

ii) அவ்வாறு மேற்படி சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் பெட்டிக் கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.200 அல்லது அப்பகுதியில் நிலவும் உயர்ந்த குத்தகைத் தொகையில் நான்கில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவோ அதனை பொது ஏலம் தவிர்த்து நிர்ணயம் செய்யலாம்.

iii) நிபந்தனைகள் மீறப்படுமாயின் மேற்படி சங்கத்திற்கான குத்தகை ரத்து செய்யப்படலாம்.

iv) பெட்டிக் கடையை, தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கம் தன்னுடைய சொந்த செலவில் நிர்மாணித்துக் கொள்ள வேண்டும்.

4) தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்திற்கு எந்தெந்த மாநகராட்சிகள் /நகராட்சிகள் நடத்தும் பேருந்து நிலையங்களில் தமிழ் நூல்கள் விற்பனை செய்ய கடை ஒதுக்கீடு வேண்டுமோ அந்தந்த மாநகராட்சி / நகராட்சி ஆணையருக்கு அச்சங்கம் முறையாக விண்ணப்பம் அளிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள், மேற்படி சங்கத்திற்கு, பேருந்து நிலையங்களில் தமிழ்நூல்கள் விற்பனைக்கென ஒதுக்கப்பட்டுள்ள இரு கடைகளில் ஒரு கடையை உடனே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009,
தலைவர், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கம், சென்னை –600 006.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அந2) துறை, சென்னை –600 009
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.
6/5/09